**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**21 ஜூலை 2023 / 03 முஹர்ரம் 1445 ஹிஜிரி**

# மாறி வரும் உலகில் கல்வியறிவின் மூலம் முன்னேற்றம் காண்பது

الحَمدُ لِلَّهِ الغَنِيِّ الحَمِيدِ، وَأَشهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحدَهُ لَا شَرِيكَ لَهُ، وَهُوَ عَلَى كُلِّ شَيءٍ شَهِيدٌ، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ المَبعُوثُ بِالرَّحمَةِ وَالقَولِ السَّدِيدِ، اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحبِهِ وَسَلِّم تَسلِيمًا كَثِيرًا. أَمَّا بَعدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُسلِمُونَ.

**அன்பிற்குரிய இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும் அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” [பக்தியை] அதிகரித்துக் கொள்ள தொடர்ந்து முயற்சிப்போமாக! தம்மைத் தாமே முன்னேற்றிக் கொள்வதற்கு தொடர்ந்து முயற்சிக்கும் தனிநபர்களாக ஆகுவோமாக! அப்போதுதான், சமுதாயத்துக்கு ஆக்கப்பூர்வமாக பங்களிப்புக்களைச் செய்யும் ஆற்றலை நாம் பெறுவோம். இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்ற பின்வரும் ஹதீதில் சிந்தனை செய்வோமாக:

عَلَى اَلْعَاقِلِ أَنْ يَكُونَ بَصِيراً فِي زَمَانِهِ مُقْبِلاً عَلَى شَأْنِهِ حَافِظاً لِلِسَانِهِ

பொருள்: ஒரு அறிவுப்பூர்வமான நபர் தனது காலத்தின் விவகாரங்களில் விழிப்புணர்வுடன் இருப்பதுடன், அவற்றில் கவனம் செலுத்துபவராகவும் இருப்பார்; தனது நாவைப் பாதுகாப்பவராகவும் இருப்பார். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னு ஹிப்பான் ரஹ்]

தற்போது கூறப்பட்ட ஹதீது சுருக்கமானதாக இருப்பினும், விலைமதிக்க முடியாத சிறந்த போதனைகள் இந்த ஹதீதில் காணப்படுகின்றன. காலங்களில் மாற்றம் ஏற்படுவதென்பது காலத்தின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி என்பதால், ஒவ்வொரு காலத்தின் முன்னேற்றங்களைப் பற்றி அறிந்து வைத்திருப்பது அவசியம் என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். கடந்த காலத்தில் சாதாரணமானதாகக் கருதப்பட்ட விஷயம் தற்காலத்திலும் சாதாரமாணதாகவே இருக்கும் எனக் கூற இயலாது.

தொழில் நுட்பத்தின் மிக வேகமான முன்னேற்றமானது இதற்கு உதாரணமாக உள்ளது. தொழில் நுட்பங்கள் ஒருபுறம், பல நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றனவென்றாலும், மாற்றங்கள் விஷயத்தில் விழிப்புணர்வுடன் இருப்பதும், அதற்குத்தக்க செயல்படுவதும் அவசியமாக உள்ளது. மேலும், இந்த சவால்களையும் மாற்றங்களையும் எதிர்கொள்ளும் வகையில், தேவையான திறமைகள் மற்றும் கல்வியறிவுகளை வழங்கப்பட்டு, அடுத்த தலைமுறையினரை ஆயத்தப்படுத்துவதும் தயார் செய்வதும் நமது பொறுப்பாக உள்ளது.

இக்கருத்துக்களெல்லாம், காலத்தின் மாற்றங்கள் மற்றும் முன்னேற்றத்தின் விஷயத்தில் விழிப்புடன் இருப்பவர்களின் சிந்தனையில் இடம் பெற்றிருக்கும். இந்த விழிப்புணர்வானது, காலத்திற்குத் தக்க, பொருத்தமான

கல்வியறிவுடன் ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும், தொடர்ந்து புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதற்கும் தனிநபர்களைத் தூண்டுவதாக இருக்கும்.

**சகோதரர்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனில் கூறும் பின்வரும் கருத்துக்களில் சிந்தனை செய்வோமாக:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا قِيلَ لَكُمۡ تَفَسَّحُواْ فِي ٱلۡمَجَٰلِسِ فَٱفۡسَحُواْ يَفۡسَحِ ٱللَّهُ لَكُمۡۖ وَإِذَا قِيلَ
ٱنشُزُواْ فَٱنشُزُواْ يَرۡفَعِ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُواْ مِنكُمۡ وَٱلَّذِينَ أُوتُواْ ٱلۡعِلۡمَ دَرَجَٰتٖۚ وَٱللَّهُ بِمَا تَعۡمَلُونَ
خَبِيرٞ ١١

பொருள்: ஈமான் கொண்டவர்களே! [ஓரிறை நம்பிக்கையாளர்களே!] சபைகளில் "நகர்ந்து இடங்கொடுங்கள்" என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், நகர்ந்து இடம் கொடுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு இடம் கொடுப்பான்; தவிர, "எழுந்திருங்கள்" என்று கூறப்பட்டால், உடனே எழுந்திருங்கள்; அன்றியும், உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் [ஓரிறை நம்பிக்கையாளர்களுக்கும்] கல்வி, ஞானம் வழங்கப்பட்டுள்ள வர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் - அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். [அத்தியாயம்: அல்-முஜாதிலா, வசனம்:11]

தற்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமாகிறது, தனிநபர்களை கல்வியறிவின் மூலம் அல்லாஹ் கண்ணியப்படுத்துவதாகக் கூறுகின்றது. கல்வியறிவானது நமது வாழ்வின் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. நம்மிடம் மலரும் கல்வியறிவானது நமக்கு மட்டும் பயன் தருவதாக இருப்பதில்லை; மாறாக, அத்துடன், சமுதாய நலனுக்காக நாம் பங்காற்றுவதற்கும் அது காரணமாக உள்ளது.

நாம் இங்கு அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் யாதெனில். மேற்கண்ட வசனத்தில் கல்வியறிவைப் பற்றிக் கூறும் அல்லாஹ், அந்தக் கல்வியறிவானது மார்க்க சம்பந்தமான, ஷரீஅத் கல்வியறிவு மட்டும் எனக் கூறவில்லை. அல்லாஹ் கூறும் கல்வியறிவானது, பலன் தரும் அனைத்து வகையானக் கல்வியறிவுகளையும் உள்ளடக்கியதாகும். நமது கடந்த கால அறிஞர்களின் வரலாற்றை நாம் ஆய்வு செய்து பார்த்தால், அவர்களில் பலர் மார்க்கக் கல்வியறிவில் மட்டும் திறன்மிக்கவர்களாக இருக்கவில்லை; மருத்துவம், வேதியியல், கணிதவியல் ஆகிய அனைத்திலும் திறன்மிக்கவர்களாக இருந்துள்ளதை நாம் அறியலாம்.

எனவே, மேற்கண்ட வசனமாகிறது, பயனுள்ளக் கல்வியறிவைத் தேட விரும்பும் தனிநபர்களுக்குப் பலமான நினைவூட்டுதலாக உள்ளது. ஒவ்வொருவரிடமும் வித்தியாசமானத் தேவைகளும் திறமைகளும் காணப்படுகின்றன; ஒருவருக்குப் பயனுள்ள ஒரு விஷயம் மற்றவருக்குப் பொருத்தமில்லாததாக இருக்கலாம். உதாரணமாக, குறிப்பிட்ட சில கல்வியறிவுகள், குறிப்பிட்ட துறைகளுக்கு மட்டுமே பொருந்துவதாக இருக்கும். எனவே, நமது தேவைகளை நாம் மதிப்பீடு செய்து, அதற்குத் தக்க கல்வியறிவைத் தேடுவது அவசியமாகும். அதுதான், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வழிகாட்டுதலாகவும் உள்ளது. இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

أَنْتُمْ أَعْلَمُ بِأَمْرِ دُنْيَاكُمْ

பொருள்: ”உங்களின் உலக விவகாரங்களை நீங்களே அதிகம் அறிந்தவர்களாக இருக்கின்றீர்கள்” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

**சகோதர, சகோதரிகளே!**

உலகம் மிகவும் வேகமாக முன்னேற்றம் கண்டு வரும் நிலையில், தொழிற்கூடங்களில் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். அறிவுப்பூர்வமான தனிநபர்கள் இம்முன்னேற்றங் களின் விஷயத்தில் விழிப்புணர்வுடன் இருப்பார்கள்; தமது கடமைகளை தமது திறமைக்குத் தக்கவாறு சிறப்பாக நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து கல்வியறிவைத் தேடிக் கொண்டிருப்பார்கள்; தமது திறமைகளைச் செம்மைப்படுத்தி, கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்பவர்களாக இருப்பார்கள்; கல்வியைத் தேடுவதென்பது வாழ்நாள் முழுவதும் செய்யப்பட வேண்டிய முயற்சி என்பதையும் அறிந்தவர்களாக இருப்பார்கள்.

மனிதர்களுக்குப் பயன் தரும் மக்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக! பயனுள்ள கல்வியறிவைத் தேடுவதில் அல்லாஹ்வின் அருள்களைப் பெற்றவர்களாக ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَارَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضلِهِ يُعطِكُم، وَلَذِكرُ اللهِ أَكبَرُ، وَاللهُ يَعلَمُ مَا تَصنَعُونَ.